ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

திருக்கோட்டியூர் நம்பி எம்பெருமானாருக்கு

அருளிச்செய்த

18 தினைட்டு ரஹஸ்யங்கள்

திருக்கோட்டியூர் நம்பியார் எம்பெருமானாரை பதினெட்டுதரம் நடப்பித்தருளி ஒருதரத்துக்கு ஓரோரர்த்தத்தை ப்ரவர்தித்தருளின தெங்நனே யென்னில்; மூமுக்ஷுவுக்கு வம்ஹார முறும் நசிக்கவேணும். நசிக்கிற தெங்நனே யென்னில்; பார்யா புத்ராதிகள் பக்கல், "பங்கா கபத்யதேகேஃ கேஃபங்கம்நபத்யதே - லோகா கபத்யதேஜ்ஞா நீஜ்ஞா நீலோகம் நபத்யதே" என்று சொல்லுகிறபடியே, பிள்ளைப்பூச்சிக்கு வந்தருப்தி புழுதியிலே யாஞலும் அதுக்கு வந்த புழுதி யொட்டாதாப்போலே வம்ஹார முறும் நசிக்கவேணும், 1. அது நசித்தாலொழிய அஹங்கார மமகார நிவ்ருத்தியாகமாட்டாது. அஹங்கார மமகார நிவ்ருத்தி எங்நனேயென்னில்; அஹங்காரம்-கர்வம்; மமகாரம்-மாத்ஸர்யம்; "அக்நேர் மித்ராத்யதாதீபம் ஸீதாத் கர்வம் நிவர்ஹயேத்" என்கிறபடியே - அக்நியிஞலே

பிறந்த விளக்கு ஶீதளமான காற்றினாலே அ
தாப்போலே அஹங்காரமமகார நிவ்ருத்தி
வேணும், 2. அஹங்கார மமகார நிவ்ரு
யானலொழிய தேஹாபிமானம் போகாது,
தேஹாபிமானம் போனலொழிய ஆத்மஜ்ஞா
பிறக்கமாட்டாது, 4. ஆத்மஜ்ஞானம் பிறந்
லொழிய ஐஸ்வர்ய போகாதிகளிடத்தில் உ
ஷபிறக்காது, 5. ஐஸ்வர்ய போகாதிகளிடத்தி
உபேக்ஷை பிறந்தாலொழிய பகவத்ப்ரேம
பிறக்கமாட்டாது, 6. பகவத்ப்ரேமம் பிறந்
லொழிய விஷயாந்தரருசிவிடாது, 7. விஷயா
தரருசி விட்டாலொழிய பாரதந்த்ர்யம் பிறக்
மாட்டாது, 8. பாரதந்த்ர்யம் பிறந்தாலொழி
அர்த்த காம ராக த்வேஷாதிக ளொழியா
9. ராகத்வேஷாதிக ளொழிந்தாலொழிய ஶ்ரீ
ஷ்ணவத்வம் கைகூடாது, 10. ஶ்ரீவைஷ்ணவ
வம் கைகூடினலொழிய ஸாத்விக பரிக்ரஹ
பிறக்கமாட்டாது, 11. ஸாத்விக பரிக்ரஹ
பிறந்தாலொழிய பாகவத பரிக்ரஹம் பிறக்கமா
டாது, 12. பாகவத பரிக்ரஹம் பிறந்தாலொழி
பகவத்பரிக்ரஹம் பிறக்கமாட்டாது, 13. பகவ
பரிக்ரஹம் பிறந்தாலொழிய அநந்ய ப்ரயோஜ
னகமாட்டான், 14. அநந்ய ப்ரயோஜநனகாதே
அநந்யார்ஹ ஶேஷபூதனகான். 15. அநந்யார்ஹ
ஶேஷபூதனகாதே அநந்ய ஶரணனகமாட்டான்
16. அநந்ய ஶரணனகாதே அதிகாரி புருஷனா
மாட்டான், 17. அதிகாரி புருஷனவானுக்கே
திருமந்த்ரார்த்தம் கைகூடும், 18. இப்படி ப

னெட்டுதரம் எழுந்தருளின எம்பெருமானுருக்கு
பதினெட்டு ரஹஸ்யங்கள் நம்பி யருளிச்செய்த
க்ரமம்.

நம்பி திருவடிகளே ஶரணம்.

திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்த

ஆறுவார்த்தை

முமுக்ஷுவாய் ப்ரபந்தனு யிருக்குமவனுக்கு
அஞ்சுகுடி த்யாஜ்யமும் மூன்றுகுடி உபாதேய
முமா யிருக்கும். அதென்போல வென்னில்;
பதிவ்ரதையா யிருப்பாளொரு ஸ்த்ரீக்கு அஞ்சு
குடி தயாஜ்யமும் மூன்றுகுடி உபாதேயமுமானுப்
போலே. அவளுக்கு த்யாஜ்யர் - கன்னிகைகள்,
வேஸ்யைகள், வேஸ்யாபதிகள், ஒருவனுக்குக்
கைகொடுத்து வைத்திழந்து போனவள், உள்ளே
யிருந்து மசக்குகிறவள்; இனி உபாதேயராவார்-
மாதாபிதாக்கள், தன் பர்த்தாவுக்கு அவர்ஜநீய
ரான பந்துக்கள், தன்னைடொத்த பதிவ்ரதை
கள். இவனுக்கு த்யாஜ்யர்-ஸம்ஸாரிகள், தேவ
காந்தரங்கள், தேவதாந்தர பாரதந்த்ர்யர்கள், தர்ம
நத்திலே புகுந்து நின்று தர்மந பராங்முகராய்ப்
போருமவர்கள், ரூபநாமங்களே யுடையரா
யுள்ளேபுகுந்து அநந்ய ப்ரயோஜநரோடே
மசக்குப் பாராட்டித் திரிகிறவர்கள்; இனி உபா
தேயர், ஆசார்யர்கள், ஶ்ரீ வைஷ்ணவர்கள்,
அநந்ய ப்ரஹ்மசாரிகள்.

உடையவருக்கு திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்த

ப்ரமேயஸாரம்

ப்ரபந்நனுக்கு பரிஹார்யமாம் ஆறு. ஆஸ்ர யணவிரோதி, ஸ்ரவணவிரோதி, அநுபவ விரோதி, ஸ்வரூபவிரோதி, பரத்வவிரோதி, ப்ராப்திவிரோதி. இதில், ஆஸ்ரயணவிரோதி யாவது - அஹங்கார மமகாரமும், பலாபிஸந்தி யும், புருஷகாரத்தை யிகழ்கையும், பேற்றில் ஸம்ஸயமும்; ஸ்ரவணவிரோதியாவது-தேவதாந் தரதாவிஷயங்களில் அவஸமாகவும் செலி தாழ்க்கை; அநுபவவிரோதியாவது-போகத்வ யம்கொண்டு புக்கு ஸ்நாநத்ரவ்யங்கொண்டு புறப்படுகிற விஷயாநுபவேச்சை; ஸ்வரூப விரோதியாவது - தன்னை பரதந்த்ரனுகை விடை யாதே ஸ்வதந்த்ரனுகவிசைகை; பரத்வவிரோதி யாவது-க்ஷேத்ரஜ்ஞான ப்ரஹ்ம ருத்ராதிகளை ஈஸ்வரனுக ப்ரமிக்கை; ப்ராப்திவிரோதியாவது- கேவலரோட்டைச் சேர்த்தி என்றும்; பகவத் ப்ராப்தி ப்ரதிபந்தகம்-ஸரீரம், ஆத்மாத்மீயாநு வர்த்தந ப்ரதிபந்தகம்-புத்ர மித்ராதிகள், பாகவ தாநுவர்த்தந ப்ரதிபந்தகம் - இதரஸஹவாஸம், பகவச்சேஷத்வ ப்ரதிபந்தகம் - அஹங்காரம், உபாயாத்யவஸாய ப்ரதிபந்தகம் - மமகாரம், உபேயருசி ப்ரதிபந்தகம் - விஷயப்ராவண்ய மென்றும், வ்யாக்ரஸிம்ஹங்களோபாதி யுபாய வேஷம் யூதபதியான மஹாகஜம்போலே உபேய

வேஷமென்றும், ஸ்வரூபம் வாய்திறக்க வொட் டாது, விரோதி வாய்மூடவொட்டாது, த்வரை நற்றரிக்க வொட்டாது என்றும், ஸ்வரூபம் தனிபொருது தேஹம் திரள்பொருது என்றும், வ்ருத்தி சோற்றேடேபோம், சோறு உடம் போடேபோம், உடம்பு மண்ணோடேபோம், ஆத்மா கர்மத்தோடே போம், ஈஸ்வரன் கண்ண நீரோடே போமென்றும், சேதநனென்றை நினைக்கும்போது ஈஸ்வரன் திருவுள்ளத்திலே ஆறுப்ரகாரமாக நினைவுகூடினலாய்த்து நினை க்கலாவது; எவை யென்னில்:—கர்த்ருத்வம், காரயித்ருத்வம், உதாஸீநத்வம், அநுமந்த்ருத் வம், ஸஹகாரித்வம், பலப்ரதத்வம். இதில் கர்த்ருத்வமாவது - தான் மூதல் நினைக்கை; கார யித்ருத்வமாவது - அந்நினைவு இவனை நினைப் பிக்கை; உதாஸீனத்வமாவது - நினைப்பிக்குமிட த்திலிவன் கர்மமடியாக நினைப்பிக்கை, அநு மந்த்ருத்வமாவது - இவன் நினைக்குமிடத்தில் விலக்கவல்லவனு யிருக்க செய்தே விலக்கா தொழிகை; ஸஹகாரித்வமாவது - சேதந னீஸ வனையொழிய வொருப்ரவ்ருத்தி நிவ்ருத்திக்ஷ மனன்றிக்கே யிருக்கை; பலப்ரதத்வமாவது - இவை யித்தனையும் இவன் பண்ணின கர்மத்தி னுடைய பலமாம்படி பத்தும் பத்தாகவறுத்துத் தீர்க்கை என்றும், ஸ்வரூபத்துக்கு ஸம்ஸரண யோக்யதை பரதந்த்ரசேதநத்வம்; ஸஹகாரி காரணம் - அநாத்யாஜ்ஞாதிலங்கநமாகிற வப ராதம்; ப்ரதானகாரணம் - ஈஸ்வரனுடைய நிரங்

குரு ஸ்வாதந்த்ர்யம்; ஸ்வரூபத்துக்கு பரமப்ராப்யமான கைங்கர்ய யோக்யதை-ஸேஷத்வேஹேதுசேதனத்வம். ஸஹகாரிகாரணம் அனுகூலவ்ருத்திகளாகிற பக்தி ப்ரபத்திகள்; ப்ரதானகாரணம் ஈஸ்வரனுடைய ஸஹஜ காருண்யம் என்றும், ஜ்ஞானம் ஜ்ஞானத்தை வினியோகங் கொள்ளும்படி என்னென்னில் - இவன் கரணத்வாரா வினியோகப்படும்; அவன் விக்ரஹத்வாரா வினியோகங் கொள்ளும்; ஜ்ஞானம் ஜ்ஞானத்துக்கு ஸேஷமானபடி என்னென்னில்-யாதொன்றினுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகள் யாதொன்றிலே கிடக்கிறது அது ஸேஷியாகத் தட்டில்லே. இப்படியிருக்கிற ஜ்ஞானத்தை அவித்யை மூடினபடி என்னென்னில்-கற்கலங்காதே நீர் கலங்குமித்தனையிறே. அப்ராப்தத்திலே கலங்குதல், ப்ராப்தத்திலே கலங்குதல்; ஜ்ஞானம் த்ரவ்யமாகையாலே யெப்போது மொக்க கலங்கியல்லதிராதிறே. ஸ்தூலத்திலே ஸூக்ஷ்மமிருந்தபடி யென்னென்னில்-ஜ்ஞானேந்த்ரியங்களிலே வ்யாபித்து நிற்கும் "சரீரம் யதவாப்நோதி யச்சாப்யுத்காமதீஸ்வரः। க்ருஹீத்வைதானி ஸம்யாதி வாயுர்கந்தா நிவாஸயாத்" என்கிறபடியே வாயு கந்தத்தைக் கடிதாகக் கொண்டு போமாப்போலே, இந்த்ரியங்களையும் ஸூக்ஷ்மஸரீரத்தோடே க்ரஹித்துக்கொண்டு போரா நிற்கும். ஸ்தூலம் விட்டபோதே ஸூக்ஷ்மம் விடாதொழிவா னென்னென்னில் - ப்ராக்ருத தேஸத்திலே அப்ராக்ருததேஹ மில்லாமை

யாலே; இது யாதொரு தேஸத்திலே விட்டது அது அப்ராக்ருத தேஸமாமித்தனை. இது கமன ஸாதன மாகையாலும், போகிற வழியிலுள்ள தேவஜாதிகள் இவனை ஸத்கரித்துத் தந்தாம் ஸ்வரூபம் பெறவேண்டுகையாலும், ஸூக்ஷ்மம் விட்டால் பன்னிரண்டுகோடி ஆதித்யர்கள் அழலைக்கழற்றி யொளியைத் தோற்றிஞப் போலே யிருக்கிற விவன் தேஜஸ்ஸை புற வெள்ளப்பட்டால தேஸ தேஸங்களிலுள்ளார் எதிரே நின்று கிஞ்சித்காரித்து ஸ்வரூபம்பெற வொண்ணுமையாலுமிறே இது அவ்வருகுங் கிடக்கிறது; அதவா-ராஜமஹிஷி அந்தஃபுரத்துக்குப் போகும்போது தட்டுப்பாயிட்டு மூடியே போகை ஸ்வரூபமிறே; அப்படியே தேவஜாதிகளும்; "இடங்கெட வெம்மைப் போந்தளியா யென்றும்," "நீணகர் நீணெறிவைத் தருளா" யென்றும், சொல்லிக் காரியம் தலைக்கட்டினுல் எதிரம்பு கோர்க்கும் மனஸ்ஸை யுடையவர்களாகையாலே அப்படிப்பட்ட ஹேயர்கள் கண்படாமல் போய் வைகுந்தத் திருவாசலிலே யிழிந்து தட்டுப்பாய் வாங்குமித்தனை. அதாவது-ஸ்ரீவைகுண்டநாதனை யுகப்பிக்கக்கடவ அப்ஸரஸ்ஸுக்கள், "ஸதம்மாலாஹஸ்தாஸ் ஸத மஞ்ஜனஹஸ்தாஸ் ஸதம்சூர்ணஹஸ்தாஸ் ஸதம் வாஸோஹஸ்தாஸ் ஸதமாபரணஹஸ்தாः" என்றிவனையும் உகப்பிக்கவந்தால் அவர்கள் முகத்திலேயிறே இவன் விழிப்பது. ஸ்வரூபமிருக்கும்படி ஜ்ஞானமிருக்கும் அவனுகப்பிலே கிடக்கை

யாலே; அதாவது அவனுடைய ஜ்ஞானாநந்தத்திலே யிவன் ஸத்தைகிடக்க, அவனைத் தண்ணீர் தண்ணீர் என்னப் பண்ணுகிறது என்று உடையவர்க்குத் திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்த ப்ரமேயஸாரம்.

ரஹஸ்யத்ரய விவரணம்

ஓரொன்றி லநுக்தங்களாய், அவஶ்யம் ஜ்ஞாதவ்யங்களான அர்த்த விஶேஷங்களுக்கு விவரணமாகையாலே, அதிலே ரஹஸ்யத்ரயமும் ஒருவனுக்கு ஜ்ஞாதவ்யமாகக் கடவது. எத்தையெது விவரிக்கிறதென்னில்-ஸவிபக்திகமான அகாரத்தை அநந்தராக்ஷரத்வயம் விவரிக்கிறது; அவ்வக்ஷரத்வயத்தையும் மந்த்ரஶேஷபதத்வயம் விவரிக்கிறது; அப்பதத்வயத்தையும் த்வயத்தில் வாக்யத்வயம் விவரிக்கிறது; அவ்வாக்யத்வயத்தையும் சரமஶ்லோகத்தில் அர்த்தத்வயம் விவரிக்கிறது; அதில் அகாரத்தை அக்ஷரத்வயத்தில் ப்ரதமாக்ஷரம் விவரிக்கிறது; விபக்தியை அநந்தராக்ஷரம் விவரிக்கிறது; இதில் ப்ரதமாக்ஷரத்தை ப்ரதமபதம் விவரிக்கிறது; அநந்தராக்ஷரத்தை அநந்தரபதம் விவரிக்கிறது; இதில் ப்ரதமபதத்தை ப்ரதமவாக்யம் விவரிக்கிறது; அநந்தர பதத்தை அநந்தர வாக்யம் விவரிக்கிறது; இதில் ப்ரதமவாக்யத்தை பூர்வார்த்தம் விவரிக்கிறது; உத்தரவாக்யத்தை

உத்தரார்த்தம் விவரிக்கிறது; இதில் ஶேஷத்வ ப்ரதிஸம்பந்தியைச் சொல்லுகிற வகாரத்துக்கு அநந்யார்ஹ ஶேஷத்வ வாசகமான உகாரம் விவரணமானபடி எங்ஙனேயென்னில், அகாரவாச்யனுடைய ஶேஷித்வம் ஆஶ்ரயாந்தரங்களிலும் நடக்குமோ, அநந்ய ஸாதாரணமாயிருக்குமோவென்று ஸந்தேஹமானால் அதினுடைய அநந்ய ஸாதாரணத்வ ப்ரகாஶக மாகையாலே உகாரம் அகார விவரணமாகிறது. எங்ஙனே யென்னில், சொல்லுகிற சேதநனுடைய அநந்யார்ஹ ஶேஷத்வம் ஸித்திப்பது அதுக்கு ப்ரதிஸம்பந்தியான ஶேஷித்வம் ஓரிடத்திலே யிளைப்பாரில், அங்ஙனன்றியிலே அனேகம் ஶேஷிகளாகில் அநந்யார்ஹ ஶேஷத்வம் ஸித்தியாது. அந்யராயிருப்பார் சில ஶேஷிகளுண்டாகில் அந்யஶேஷத்வம், ஸித்திப்பதொழிய அநந்யார்ஹ ஶேஷத்வம் ஸித்தியாது. ஆகையாலே அகாரவாச்யனுடைய ஸமாப்யதிக தரித்ரத்தைச் சொல்லிற்றாயித்து. சதுர்த்தியிற் சொல்லுகிற ஶேஷத்வத்துக்கு ஆஶ்ரய விஶேஷ ப்ரகாஶகமாகக்கொண்டு விவரணமாகிறது மகாரம். நிராஶ்ரயமாக தர்மத்தின் ஸ்திதி யில்லையே; பகவத்ஸ்வதிரிக்தரைத் தன்னோடு பிறரோடு வாஸியற அந்யராகச் சொல்லி அவர்களில் அந்யதமன் சேதந னென்கிறது. உகாரத்தில் கழியுண்கிற தேவதாந்தராதி மாத்ரத்தாலே அந்யஶப்தத்துக்கு பூர்த்தி யில்லாமையாலே அவ்வந்ய ஶப்தத்தில் அந்விதனாய்த் தன்னையுங் கழித்து அநந்

யார்ஹதையை பூரிக்கிற மூகத்தாலே உகார வி
ரணமாகிறது நமஸ்ஸப்தம். "அஹமபி நமம பகவ
ஏவாஹமஸ்மி" என்கிறபடியே, ஸ்வரக்ஷணை
தில் ப்ராப்தி யில்லாத அத்யந்த பாரதந்த்ரய
தைச் சொல்லுகிறது நமஸ்ஸப்தத்திலேயிரு
ஆகையாலே உகார விவரணமாகிறது நமஸ்ஸ
தம். ஸேஷத்வத்துக்கு ஆஸ்ரய விஸேஷப்ரக
ஸகமான மகார வாச்யனுடைய ஸேஷத்வ பூர்த்தி
பிறப்பது "அகிஞ்சித்கரஸ்ய ஸேஷத்வானு
பத்தி:" என்கிறபடியே கிஞ்சித்காரத்தாலே
யாகையாலே கிஞ்சித்கார ப்ரகாஸகமாய்க்
கொண்டு மகார விவரணமாகிறது நாராயணா
பதம். அத்யந்த பாரதந்த்ரிய ப்ரயுக்தமாய் வரு
கிற உபாய விஸேஷத்தினுடைய ஸ்வரூப
மென்ன, இதிலிழிகைக் கேகாந்தமான துறை
யென்ன, இவ்வுபாய விஸேஷமாகச் செய்ய
வேண்டு மம்ஸமென்ன, இவற்றை ப்ரகாசிப்
பிக்கையாலே நமஸ்ஸப்த விவரணமாகிறது
த்வயத்தில் பூர்வவாக்யம்; கைங்கர்ய ப்ரதிஸம்
பந்தி யொரு மிதுனமென்னு மிடத்தையும்,
அதுக்கு கலையானவற்றையுங் கழித்துத் தருகை
யாலே நாராயணஸப்தத்துக்கு விவரணமாகிறது
வுத்தரவாக்யம். அவ் வுபாயஸ்வீகாரம் வாத
ஞ்சந்த நிவ்ருத்தி பூர்வகமாகையாலே தத்ப்ர
காஸகமாய்க் கொண்டு பூர்வ வாக்யத்துக்கு விவ
ரணமாகிறது பூர்வார்த்தம்; உத்தரவாக்யத்திற்
சொன்ன ப்ராப்யஸித்தி விரோதி நிவ்ருத்தி
பூர்வகமாகக் கடவதென்று விவரணமாகிறது

உத்தரார்த்தம். ஸ்ரீவாதிகாரமாயும், அதிக்ரு
தாதிகாரமாயும் அர்த்தத்ரயாத்மகமாயு மிருக்
கும். இதில் ஸ்ரீமந் என்கிற பதம் புருஷகாரம்,
"ஸரணம்ப்ரபத்யே" என்கிறபதம் அதிகாரி க்ருத்
யம். நடுவில் நாராயண சரணௌ என்கிறபதம்
உபாயம். உபாயம் புருஷகார ஸாபேக்ஷமாயும்,
அதிகாரி ஸாபேக்ஷமாயு மிருக்கும்; பலத்தில்
வந்தால் அந்ய நிரபேக்ஷமா யிருக்கும். உத்தர
வாக்யமும் பதத்ரயாத்மகமா யிருக்கும். இதில்
அயவென்கிற விடம் கைங்கர்யத்தைச் சொல்லு
கிறது, இதுக்குக் கீழ் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி
யைச் சொல்லுகிறது, மேலில் பதம் கைங்கர்யத்
தில் கலையறுக்கிறது.

ஆச்சாம்பிள்ளை திருவடிகளே ஸரணம்.

எம்பெருமானர் அருளிச்செய்த

ப்ரபந்ந க்ருத்யம்

முமுக்ஷுவாய் ப்ரபன்னனு மிருக்குமவ
னுக்கு இருக்கும் நாளைக்கு காலக்ஷேபம் பண்
ணும் ப்ரகார மிருக்கும்படி யெங்ஙனேயென்று
உடையவர் திருவடிகளிலே முதலியாண்டான்
விண்ணப்பஞ்செய்ய, குருபரம்பரா பூர்வகமாக
த்வயத்தை அநுஸந்தானம் பண்ணுவான்.
உபய விபூதிநாதனும் ஸ்ரீயஃபதியான ஸர்வேஸ்
வரனும், நாச்சிமாரும், நித்யஸூரிகளுங்கூட
வெழுந்தருளியிருக்கும் பீட கட்டணமாயிருக்கும்
த்வயம். பெரியபெருமாள் திருவடிகளைப் பார்த்த

வாறே, "பொது நின்ற பொன்னங்கழ" லென்கிற படியே ஸர்வாத்மாக்களுக்கும் ஸாதாரணமாயிருக்கும். பெரிய பெருமாளை அபய ஹஸ்தராய்ப் பார்த்தவாறே, அநந்ய ஸரணராயிருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே அஸாதாரணமாயிருக்கும். பெரியபெருமாள் திருமுகமண்டலத்தைப் பார்த்தவாறே, நித்ய ஸூரிகளுக்கும் ஸாதாரணமாயிருக்கும். ப்ராப்ய பரமான திரு மந்த்ரார்த்தத்தைப் பெரிய பெருமாள் திருவடிகளிலே அநுஸந்தானம் பண்ணுவான். ப்ரபகமான சரம ஸ்லோகத்தைப் பெரிய பெருமாள் அபய ஹஸ்தத்திலே அநுஸந்தானம் பண்ணுவான். இரண்டுங் கூடி போகரூபமான த்வயத்தைப் பெரிய பெருமாள் திருமுக மண்டலத்திலே அநுஸந்தானம் பண்ணுவான். மத்ஸ்யத்தின் வடிவெல்லாம் ஜலமயமாயிருக்குமாப்போலே இவள் அவன் ஸ்வரூபாதிகளுக்கு நிரூபக பூதையாகையாலே அவயவமெல்லாம் ஸ்ரீமயமாயிருக்கும். "ஸ்ரீஞ்ஸேவாயாம்" என்கிற தாத்வர்த்த ப்ரகாஸமாய், புருஷகார ஸ்வரூபமான ஸ்ரீ யென்கிற திருநாமத்தைப் பெரிய பெருமாள் திருநன் மார்பிலே அநுஸந்தானம் பண்ணுவான்; மந்-என்று இப் புருஷகாரம் நித்யமென்று அநுஸந்நானம் பண்ணுவான். நாராயணயென்று ஆஸ்ரயண ஸைகர்யாபாதகங்களான வாத்ஸல்யாதி குணங்களையும், ஆஸ்ரித கார்யாபாதகங்களான ஜ்ஞாநஸக்த்யாதி குணங்களையும் உடையவனென்று அநுஸந்தானம் பண்ணுவான். சரணௌ என்று பெரியபெருமாள் திருவடிகளை அநுஸந்தானம் பண்ணுவான். ஸரணம் என்று ஸரண்யரான பெரியபெருமாள் அபய ஹஸ்தத்திலே அநுஸந்தானம் பண்ணுவான். ப்ரபத்யே என்று ப்ராப்த்தாவான தன்னுடைய ஸ்வரூபானுரூப ஸ்வீகாரமென்று அநுஸந்தானம் பண்ணுவான். ஸ்ரீமதே நாராயணாய வென்கிற பதங்களை ஸ்வாமி நியாய், அவனுக்கு வல்லபையாய், ப்ராப்யையாய், கைங்கர்ய வர்த்தகையாய், பகவந்மூகோல்லாஸ ஜநகையாய், தத்ப்ரீத்யநுபவைக யாத்ரையா யிருக்கிற பெரிய பிராட்டியோடே சேஷத்வ கார்யமான கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியாயிருக்கும். அவனுடைய தாரகத்வ வ்யாபகத்வ நியந்தருத்வ ஸ்வரூபமென்ன, ஸ்வரூப குணங்களான ஜ்ஞாநபலாதிகளென்ன, அதில் நின்று மெழுந்த வாத்ஸல்யாதிகளென்ன, திவ்யாத்ம தத்ஸ்வரூப குணப்ரகாசகமான பஞ்சோப நிஷண்மய விக்ரஹங்களென்ன, விக்ரஹ குணங்களான வைலக்ஷண்ய ஸௌகுமார்யாதிகளென்ன, ஆஸ்ரித விரோதி விஷயமான ஸௌர்யாதிகளென்ன, திவ்யமங்கள விக்ரஹ ப்ரகாஸகமான திவ்யாபரணங்களென்ன, ததநுபவ விரோதி நிவர்த்தகமான திவ்யாயுதங்களென்ன, அவற்றிற் கநுரூபமான ஸ்ரீவைகுண்டத்திலே திவ்யநகரியில் திவ்ய மண்டபத்திலே மற்றை திவ்ய மஹிஷிகளோடே திவ்ய பரிச்சதங்களாலே ஸேவிக்க, ஸ்வாமித்வ ப்ரகாஸகமாக வெழுந்தருளியிருக்கிற விருப்பிலே

அநுஸந்தானம் பண்ணுவான். ஆயவென்று அவன் ஸரண்யனுகையாலும், ஸேஷியாகையாலும், இவனடிசூடும் அரஸாகையாலும், ஸேஷமாகையாலும், ஸர்வவித ஸேஷ வ்ருத்திகளையும் பண்ணப்பெறுவேனுக வேணுமென்று அநுஸந்தானம் பண்ணுவான். நமः "த்வ்யக்ஷாய ஸ்துபவேந்ம்ருத்யுः" என்றும், "மமேதித்வ்யக்ஷோம்ருத்யுः" என்றும், "யானே யென்றனதேயென்றிருந்தேன்" என்றுஞ் சொல்லப்படுகிற மः என்கிற ஷஷ்டயந்தமான பதத்தை "த்ர்யக்ஷரம் ப்ரஹ்மணः பதம்" என்றும், "நமமேதிச ஸாப்தம்" என்றும், "யானே நீ யென்னுடைமையும் நீயே" என்றுஞ் சொல்லுகிற நகாரார்த்த பலத்தாலே, ஷஷ்டயந்தமான பதத்தை நிஷேதித்து, "தனக்கேயாக" வென்கிறபடியே, அத்தலையில் நினைவே நினைவாம்படி கீழ்ச்சொன்ன ஸகல ஸேஷ வ்ருத்திகளையுங் கொண்டருள வேணுமென்று பெரியபெருமாள் திருமுகத்தைப் பார்த்து அநுஸந்தானம் பண்ணுவான் என்று அருளிச்செய்தார்.

ஸகலப்ரமாண தாத்பர்யம்

ஸ்ரீயःபதியாய், விஷ்ணுவாஸுதேவ நாராயணுதி ஸப்தவாச்யமான ப்ரஹ்மமொன்றுமே முமுக்ஷுவுக்கு ஜ்ஞாதவ்யமென்று ஸகல ப்ரமாண தாத்பர்யம். அத்த ப்ரஹ்மந்தான் விஸேஷணமென்றும் விஸேஷ்யமென்றும் த்விவிதமாயிருக்கும். விஸேஷணமாகிறது விஸேஷ்யத்தோடே பிரிந்திராத தர்மம். விஸேஷ்யமாகிறது ஸ்வவிஸேஷணத்தோடே பிரிந்திராத தர்மம். விஸேஷணமும் போகோபகரண மென்றும், லீலோபகரணமென்றும் த்விவிதமாயிருக்கும். போகமாகிறது-இஷ்ட பலானுபவம். லீலையாகிறது-காலாந்தரத்திலேயொருசலமன்றிக்கேதாகாலிக ரஸாஹேதுவான வ்யாபாரம். போகோபகரணமும்-சேதநமென்றும், அசேதநமென்றும் த்விவிதம். சேதநமாகிறது-ஜ்ஞானாஸ்ரயவஸ்து. அசேதநமாகிறது - ஜ்ஞான ஸுன்யவஸ்து. அதில் சேதநஜாதி - நித்யவர்க்க மென்றும், முக்தவர்க்கமென்றும் த்விவிதம். நித்யவர்க்கமாகிறது - ஒருநாளுமம்மாரத்தை ஸ்பரிஸியாதே பகவந் நித்ய கைங்கர்ய நிரதராயிருக்குள்ள அநந்த வைநதேய விஷ்வக்ஸேநாதி ஸூரிவர்க்கம். முக்தவர்க்கமாகிறது - பகவத்க்ருபையாலே அநாதியான வசித்வஸம்பந்தத்தில் நின்றும் விடப்பட்டு, நித்யவர்க்கத்தோடே கலந்து, அதுமுதலாக யாவதாத்மபாவி பகவத் கைங்கர்யபராயிருக்குமவர்கள். அசேதநமாகிறது ஸுத்த ஸத்வாத்மகமாய் தன்னுடே ஸம்பந்தித்த சேதநர்க்கு ஸ்வரூபப்ரகாஸகமாய், நித்யமாய், ஸ்வயம் ப்ரகாஸமாய், கர்ம நிரபேக்ஷமான பகவதிச்சையாலே திவ்ய விக்ரஹங்களாய், திவ்யாபரணங்களாய், திவ்யாயுதங்களாய், சத்ர சாமராதி பரிச்சிந்நங்களாய் திவ்ய நகரங்களாய், திவ்ய ஜநபதங்களாய், அபரிச்சிந்நமாய், நித்தி

யர்க்கும் முக்தர்க்கும் பகவானுக்கும் கைங்கர்ய போகபரிகாமாயிருக்கும். இனி லீலோபகரணமும் - சேதநமென்றும், அசேதநமென்றும் த்விவிதமாயிருக்கும்; அதிலே சேதந ஜாதியும் வர்வாரிகளென்றும், முமுக்ஷுக்களென்றும் த்விவிதம். ஸம்ஸாரிகளாகிறார்—அநாதியான வசித்வஸம்பந்தத்தாலே திரோஹிதங்களான ஸ்வரூப ஸ்வபாவங்களை யுடையராய், அதடியாக அத்யதாஜ்ஞாந, விபரீத ஜ்ஞாநங்களையுடையராய், தத்கார்யங்களான ராகத்வேஷாதி தோஷங்களான புண்ய பாபரூப நாநாவித கர்மங்களையுடையராய், அதுமூலமாக தேவ திர்யங் மநுஷ்ய ஸ்தாவரரூபமான சதுர்வித நாநாசரீரங்களிலே நிரந்தரமாக ப்ரவேசியா நின்று கொண்டு, அந்த சரீரங்களிலும், சரீராநுபந்திகளிலுமுண்டான அஹங்கார மமகாரங்களாலே வருகிற துக்கங்களிலே ஸுகபுத்தி பண்ணி நின்றுகொண்டு, சப்தாதி விஷயப்ரவணராய், தாபத்ரய தாஹ்யமாநராய், நிரந்தர துக்கஸாகரநிமக்நரா யிருக்குமவர்கள். முமுக்ஷுக்களும்- ஆத்ம ப்ராப்திகாமரென்றும், பகவத் ப்ராப்திகாமரென்றும் த்விவிதராயிருப்பர்கள். ஆத்ம ப்ராப்திகாமராகிறார்—ராஜ பதமளவாகவுடைத்தான ஐஹிகைஸ்வர்யமும், ப்ரஹ்மபதமளவாகவுடைத்தான ஆமுஷ்மிகைஸ்வர்யமும் அஸ்திரமாய் துக்கமிஸ்ர மாகையாலே, விவேகித்து, ஆத்மா ப்ரக்ருதேஃபரனுய், நித்யனுய், ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனுயிருக்கையாலே, ஆத்மபோகமே

புருஷார்த்தமென்று தத்ப்ராப்திக்கு யத்நம் பண்ணுமவர்கள். இவர்கள் தததிகமான பகவத் ப்ராப்தி ஸுகத்தை விமர்சியாதவர்கள். பகவத் ப்ராப்திகாமராகிறார்—ப்ரக்ருதேஃபரனுய், நித்யனுய், நிர்மலனுய், ஜ்ஞாநாநந்தமயனுமாய், அபரிச்சிந்த ஜ்ஞாநகுணகனுமாய், பகவதநந்யார்ஹ ஸேஷமாகையாலே அநந்யபோக்யமான ஆத்மாவுக்கு ஸ்வாநுபவம் அணுவாய், ஸ்வதந்த்ரமாகையாலே ஸ்வரூப விருத்தமென்று விஷம் போலே அநாதரித்து - நித்யமாய், நிர்மலமாய், அபரிச்சிந்த ஜ்ஞாநாநந்தமயமான ஸ்வரூபத்தை யுடையனுய், ஸர்வஜ்ஞியாய் ஸர்வஸரண்யனுய், ஸர்வப்ராப்யனான ஸ்ரீயஃபதியினுடைய திருவடிகளிலே நித்ய கைங்கர்யத்தை பரம புருஷார்த்தமாக நிச்சயித்து, ஒரு தேஸ விஸேஷத்திலும், தேஹவிஸேஷத்திலுமன்றியே ஸித்திப்பதாகையாலே, தத்ப்ராப்திக்கு விரோதியான தேஸ ஸம்பந்தமும், தேஹ ஸம்பந்தமும் விடவேணுமென்று ஆஸைப்படுமவர்கள். இவர்களும் - உபாஸக நிஷ்டரென்றும், ந்யாஸ நிஷ்டரென்றும் த்விவிதம். உபாஸக நிஷ்டராகிறார் - பலஸங்க பரித்யாக பூர்வகமாக யஜ்ஞதாநாதி கர்மங்களை யநுஷ்டிக்க விபரீத ஜ்ஞாநஹேதுவான ரஜஸ்தமஸ்ஸுக்கள் நன்றாக நஸித்து, யதாஜ்ஞாந ஹேதுவான ஸத்வம் ப்ரகாசித்து, அதனுலே பகவத் ஜ்ஞாநமுண்டாய், அது ஸாக்ஷாத்கார ஸமானமாய் அநவரத பாவநை யுண்டாய், பத்திருபாபந்நமாய்,

ஸம்ஸ்லேஷ விஸ்லேஷங்களிலே ஸுகதுக்க
ஞகப் பண்ணுவதாய், ஸாஸ்த்ரத்திலே மோக்ஷ
ஹாதந தபா விஹிதையான பக்தியை வுபாய
மாக அவலம்பித்தவர்கள். ந்யாஸ நிஷ்ட
ராகிரூர்—உபாஸநமும் அநேக ஜந்ம ஸாத்ய
மாகையாலே துஷ்கர மென்றும், தேஹஸ்
ஸாதிகாரி ப்ரப்ருத்யநேக நியமாபேக்ஷமாகை
யாலே ஸாபாயமென்றும், ப்ராப்தகர்மாவஸா
பலமாகையாலே ஸவிளம்பமென்றும், அசே
தநமாகையாலே அஸமர்த்தமென்றும், ஸ்வயத்
நஸாத்ய மாகையாலே ஸ்வரூப விருத்தமென்
றும், பின்னையுஞ் சொல்லப்படுகிற வுபா
யாபாஸங்க ளெல்லாவற்றையும் ஸாங்கமாகவும்
ஸவாஸநமாகவும் விட்டு, அந்த வுபாயங்கள்
போலன்றிக்கே நிவ்ருத்தி ஸாத்யமாகையாலும்,
ஸக்ருதநுஷ்டேய மாகையாலும், ஸுகரமு
மாயும், ஒரு நியமமும் வேண்டி யிராமையாலே
நிரபாயமாயும், தேஹாவஸான பலிதமாகை
யாலே சீக்ர பலப்ரதமாயும், பரமசேதந மாகை
யாலே பலப்ரதாநத்தில் ஸ்வயம் ஸமர்த்தமாயும்,
நிருபாதிக மாகையாலே ஸ்வரூபாநு ரூபமான
ஸ்ரீயபதியினுடைய திருவடிகளே விலக்ஷண
உபாயமாக நிச்சயித்து, அதிலே ந்யஸ்தபரா
யிருக்கு மவர்கள். இந்த ந்யாஸ நிஷ்டரும்
ஸ்வயம் ந்யஸ்தபரரென்றும்,பரந்யஸ்தபரரென்
றும் த்விவிதம். ஸ்வயம் ந்யஸ்த பராகிரூர்—
ஸதாசார்ய க்ருபையாலே லப்தஜ்ஞாநராய், ஸ்வ
தோஷத்தை யநுஸந்தித்து, ஹிதபரனை ஸர்

வேஸ்வரன் ஸ்ரீ பாதத்தைத் தாங்களே யாஸ்ர
யிக்கவஞ்சி, ஸர்வேஸ்வரனுக்குப் பத்நியாய்,
வல்லபையாய், ஸர்வாத்மாக்களுக்கும் ஸ்வா
மினியாய், மாதாவாய், அவனுடே நித்யஸம்
யுக்தையான பிராட்டி ப்ரஸாதத்தாலே பயங்
கெட்டு, வாத்ஸல்யாதி ஸமஸ்த கல்யாண
குணகண விஸிஷ்டனான ஸ்ரீயபதியினுடைய
திருவடிகளைத் தம்முடைய நிஷ்ட நிவ்ருத்திக்
கும், இஷ்ட ப்ராப்திக்கும் உபாயமாக வாஸ்ர
யிக்குமவர்கள். பரந்யஸ்தபரராகிரூர் - தங்களுக்
காக ஆசார்யனுலே அநுஷ்டிக்கப்பட்ட ஏதாத்
ருஸ ந்யாஸத்தையுடையவர்கள். இருவரும் ஸந்
பந்தந பரந்யஸ்தபர ரென்றும், நிர்நிபந்தந
பரந்யஸ்தபர ரென்றும் த்விவிதமா யிருப்பர்
கள். ஸநிபந்தந ந்யஸ்தபரராகிரூர் - தன்
னுடைய வனுவர்த்தனநிகளாலே மந்த்ரப்ரத
நன ஆசார்யனுலே அநுஷ்டிக்கப்பட்ட பரந்
யாஸத்தை யுடையவர்கள். நிர்நிபந்தன பரந்
யஸ்த பராகிரூர் - தனக்கு ப்ராப்தமான புரு
ஷார்த்தத்தினுடைய வுக்த வைலக்ஷண்யத்தை
யநுஸந்தித்து, அது இவர்களுக்கில்லாத மாத்ர
மன்றிக்கே, இவர்கள் படுகிற துர்க்கதியைக
காணப்பெறுத கேவல க்ருபையாலே ப்ரீதநன
வாசார்யனுலே அநுஷ்டிக்கப்பட்ட பரந்யா
ஸத்தை யுடையவர்கள். இவர்களில், ஸம்ஸாரி
கள்—ஈஸ்வரனுடைய சிக்ஷைக்கு விஷயமானவர்
கள். கேவலர்--உபேக்ஷைக்கு விஷயமானவர்கள்.
உபாஸகர்—அநுக்ரஹத்துக்கு விஷயமானவர்

கள். ப்ரபன்னர்—க்ருபைக்கு விஷயமானவர்கள். ப்ரபன்ன ரெல்லாருக்கும் தேஹாவஸாநத்திலே பலமே யொக்கும். உத்தரோத்தராதிகாரிகள் பாக்யாதிகாரிகள். இவர்கள் ஆர்த்தாதிகாரிக ளென்றும், த்ருப்தாதிகாரிகளென்றும் த்விவிதம். ஆர்த்தாதிகாரிகளாகிறார் — பகவத் ப்ராப்திக்கு விரோதியான வர்த்தமான ஸரீரத்தில்ஸ்திதியும், அக்நிஜ்வாலா பஞ்ஜரத்திலிருப்புப்போலே அத்யந்த துஸ்ஸஹமாய்த் தோற்றித் தந்நிவ்ருத்திக்கு த்வரிக்கு மவர்கள். த்ருப்தராகிறார்—பகவத் ப்ராப்திக்கு விரோதியான தேஹாந்தர ஸம்பந்தமும் ஸ்வர்க்கநரகாதி ப்ரவேஸத்தில் விரக்தியும் பீதியுமுண்டாய், தந்நிவ்ருத்திக்கு பகவானை யாஸ்ரயித்து, வர்த்தமான ஸரீர வியோகத்துக்கு த்வரியாதவர்கள். இவரும்-ஸ்வதேஹ ஸம்பந்த த்ருப்தரென்றும், ஸ்வதேஹி ஸம்பந்த த்ருப்த ரென்றும் த்விவிதரா யிருப்பர்கள். ஸ்வதேவ ஸம்பந்த த்ருப்தராகிறார் - ஸரீராவஸாநத்தில் போக மெத்தனையேனும் விலக்ஷணமாஞலும், ருசிவாஸனைகளாலே யித்தைவிட த்வரியாதவர் கள். ஸ்வதேஹி ஸம்பந்த த்ருப்தராகிறார்— தனக்கு மவனுக்கு முண்டான நிருபாதிக சரீர சரீரி ஸம்பந்தத்தை யநுஸந்தித்து, அவனு டைய கார்யமென்று த்வரியாதே ஐஹிகபோக தாத்பர்யத்தில் மண்டி யிருக்குமவர்கள். ஆர்த்த ராகிறார்-பகவத் ப்ராப்திக்கு விரோதியான வர்த்த மான ஸரீரத்தில ஸ்திதியும் அக்நிஜ்வாலா பஞ்ஜ ரத்தி லிருப்புப்போலே அத்யந்த துஸ்ஸஹ

மாய்த் தோன்றி, தந்நிவ்ருத்திக்கு த்வரிக்குமவர் கள். இவரும் - ப்ரதிகூல போகார்த்தரென்றும், அநுகூல போகார்த்தரென்றும் த்விவிதம். ப்ரதி கூல போகார்த்தராகிறார் - ப்ரத்யகஷ லித்தமான தாபத்ரய துக்கம் அதி துஸ்ஸஹமாய்த் தோன்றி, அதுக்கு ஹேதுவான தேஹ ஸம்பந் தத்தையும், தேஹ ஸம்பந்தத்தையும், தேஹிக ருடைய ஸஹவாஸத்தையும் பொருதே ஸாஸ்த்ர த்ருஷ்டிகளாலும் ஆசார்யர்களுடைய வசநங்க ளாலும் அறியப்படுமதாய், அந்த துக்கசந்த மின்றிக்கே, நிரதிஸயமான பகவத் ப்ராப்திரூப ஸுகத்துக்கு த்வரைப்படுமவர்கள். அநுகூல போகார்த்தராகிறார்—நிரந்தரமான த்வயாநு ஸந்தானத்தாலே தனக்கு ப்ராப்யமான பரம பதத்தில் நித்ய வாஸத்தினுடைய வைலக்ஷண் யம் விஸதமாக ப்ரகாஸிக்க, அதில்லாத க்ஷண காலமும் கல்ப ஸஹஸ்ரமாய்த் தோன்றும்படி- ஆர்த்தராய் ஏதத்ப்ராப்திக்குத் த்வரிக்கிறவர்கள். இந்த ப்ரபன்ன விஷயமான உபாய க்ருத்யம்- அநிஷ்ட நிவ்ருத்தியும் இஷ்ட ப்ராப்தியு மென்று த்விவிதமாயிருக்கும். அநிஷ்டந்தான்— பூர்வாகமென்றும் உத்தராகமென்றும் த்விவி தமா யிருக்கும். அகமாகிறது, புண்ய பாபரூப மான கர்மம். ஸ்வர்க்காதி ஸாதநமாந புண்யமும் பாபம்போலே பேற்றுக்கு ப்ரதிபந்தக மாகை யாலே அகமெனப்பட்டது. இதிலே பூர்வாக மாகிறது. ஆஸ்ரயணத்துக்கு முன்பு அநாதி காலம் பண்ணப்பட்ட கர்மம். இதுவும் ஸஞ்சித

மென்றும், ப்ராரப்தமென்றும் த்விவிதமா யிருக்கும். ஸஞ்சிதமாகிறது - பலப்ரதாநத்துக்கு உத்யோகியாமலிருக்கிறது. ப்ராரப்த மாகிறது-பல ப்ரதாநத்துக்கு உத்யோகிக்கிறது. ப்ராப்தமும்-வர்த்தமான ஸரீராரப்தமென்றும், ஸரீராந்தரா ரப்த மென்றும் த்விவிதம். உத்தராகமாகிறது-ஆஸ்ரயணத்துக் கநந்தரம் தேஹாவஸாந பர்யந்தம் வாஸநா பலத்தாலே செய்யப்பட்ட கர்மம். இதுவும்-ஜ்ஞாநக்ருதமென்றும், அஜ்ஞாநக்ருதமென்றும், த்விதமாயிருக்கும். இதுவும் ஸாநுதாப மென்றும், நிரநுதாப மென்றும் ஓரொன்றே த்விவிதமாயிருக்கும். இப்படிப்பட்ட பேதங்களை யுடைத்தான அநிஷ்டத்தை யிவனிடத்தில் ப்ரீத்யதிஸயத்தாலே உபய பூதனான ஈஸ்வரன் போக்கும்படி யென்னென்னில்-வர்த்தமான ஸரீராரப்தத்தை யொழித்து, பூர்வாகத்தில் புண்யாம்ஸத்தை யிவனை ஸ்நேஹித்தவர்களை அநுபவிப்பிக்கும். பாபாம்ஸத்தை த்வேஷித்தவர்களை அநுபவிப்பிக்கும். ஸரீராரப்தத்தை ஸரீரத்தோடே போக்கும். இவனுக்கு எப்போது மநுகூல போகார்த்தியுண்டாம். அந்த ஆர்த்தி ரூபமான மஹா துக்கத்தினாலும், தத்ஹேதுவான வநுபவாஹ்லாத ரூபமான மஹா ஸுகத்தினாலும், ஸரீராநுபாவ்யத்தை யெல்லாம் அப்போதே போக்கும். உத்தராகத்தில் அஜ்ஞாநக்ருதமும், அவனுடைய வாத்ஸல்யத்தினாலே திருவுள்ளத்துக்கு விஷயமன்றிக்கே போம். ஸாநுதாபமாந ஜ்ஞாந க்ருதமும், அவனுடைய

க்ஷமைக்கு விஷயமாம்; அது பகவத் விஷயமாநால் பகவத் விஷயமான வநுதாபத்திலே போம். பாகவத விஷயமாநால் பாகவத விஷயத்திலநுதாபத்திலே போம். நிரநுதாப ஜ்ஞாநக்ருதமும், ஸரீராநுபாவ்யம்போலே அநுபவித்துப் போக்குவன். ஸாமாந்ய நிஷித்தாநுஷ்டாநமும், பகவந் நிக்ரஹ ஹேதுவாகையாலும், சிஷ்டஜந கர்ஹிதமாகையாலும் க்ரூரம். பகவத் விஷயமான அநுதாப சூந்யமும் க்ரூரதரம். பாகவத விஷயமான வநுதாப சூந்யமும் க்ரூரதமம். ஆகையாலே ப்ரபந்நன் பகவத் பாகவத ப்ரஸாதத்துக்கொழிய க்ஷமைக்கு விஷயமாகையநுரூப மல்லாமையாலே ஸாவதாநத்தோடே நடக்கவேணும். ஆகையாலே ஜ்ஞாந ச்ருதமான ஸாநுதாபமும் உதிக்கைக்கு அவகாஸமில்லாமையாலே அநுதாப ஸூந்யமும் தூரதோ நிரஸ்தம். ஆநாலும் ஈத்ருஸமடிந ப்ரச்ருதிகளுண்டாகுவரோ வென்று ஸாஸ்த்ரம் சொல்லிற்றுயிற்று. இப்படி ஸர்வமான கர்மங்களும் நிவர்த்தகங்களாகையாலே தத்கார்யமான தேஹ ஸம்பந்தமில்லை. தேஹ ஸம்பந்த மில்லாமையாலே தத்கார்யமான அவித்யை யில்லை. இம் மூன்று மில்லாமையாலே தத்தத் வாஸநாருசிகளில்லை, ஆகையாலே ப்ரபந்நனுக்கு ஸரீராவஸாநத்திலே தேஸ காலாதிகாரி நியமங்களும், உத்தரக்ரியைகளு முபாயமன்று. ஆநாலு முத்தர க்ரியைகளும், ஆந்ருஸம்ஸ்யத்தாலும், பகவத் ப்ரீதி ஜநகங்களாகையாலுஞ் செய்யப்படு

மத்தனே. இனி யிஷ்டப்ராப்தியும் - ஐஹிகமென்
றும், ஆமுஷ்மிக மென்றும் த்விவிதம். ஐஹிகம்
பகவத் கைங்கர்யமென்றும் பாகவத கைங்கர்ய
மென்றும் த்விவிதம். கைங்கர்யமாகிறது—இஷ்
டஞ் செய்கை. அதுதான் ஸாமாந்ய விஹித
நுஷ்டானமும்-பகவத் ஸந்தோஷ ஹேதுவாகை
யாலே - கைங்கர்யமென்னக் கடவதிறே. பகவா
னுக் கிஷ்டம் ஸாஸ்த்ர முகத்தாலே அறிய
வேணும். பாகவதர்களுக் கிஷ்டம் அவர்கள்
நினைவிலே அறியவேணும். ஆக கைங்கர்யமும்
மாநஸமென்றும் காயிகமென்றும் த்விவிதம்.
மாநஸமாகிறது - அந்ய பரமாகாமல் தத்பரமாக்
குகை. அதுவும் செய்த வுபகாரத்தை ஸ்மரிக்
கையும், செய்யக்கடவ வுபகாரத்தை யபேக்ஷிக்
கையுமென்று த்விவிதம். இதில் ஈஸ்வரன்
செய்த வுபகாரமாகிறது-ஸதாசார்யனை யாஸ்ரயிப்
பிக்கையும், ததர்த்தமான அதிகாரி ஸம்பத்துமம்.
செய்யத்தக்க வுபகாரமாகிறது - பரமபதத்தில்
நித்யகைங்கர்ய ப்ராப்தியும், ததர்த்தமான வதி
காரி ஸம்பத்தும் - ஆமுஷ்மிகமான கைங்கர்ய
மும் இதுவே. அந்த கைங்கர்யமும் - வாசிக
மென்றும், காயிகமென்றும் த்விவிதம். வாசிக
மாகிறது - ஸ்துதி, நாம ஸங்கீர்த்தநாதிகள்.
காயிகமாகிறது - ஸம்மார்ஜந மாலா பந்தநாதி
கள்; பாகவத கைங்கர்யமும்-ஆசார்ய கைங்கர்ய
மென்றும் தத்துல்யரான பாகவத கைங்கர்ய
மென்றும் த்விவிதம். ஆசார்யரும் - மந்த்ரப்ரத
ரென்றும், மந்த்ரார்த்த ப்ரதரென்றும் த்விவிதம்.

இவர்கள் பக்கல் செய்யும் ப்ரதிபத்தி ஸமமாயிரு
க்கும். பகவானுடைய திருவடிகளிரண்டிலும்
வைஷம்ய முண்டாகிலிறே ஆசார்ய விஷயத்
தில் வைஷம்ய முண்டாவது? இப்படிப்பட்ட
ஆசார்யர்கள் செய்த வுபகாரமாகிறது - அநாதி
காலம் விமுகனான சேதனனை பகவத் விஷயத்தில்
அபிமுகனாக்கி செய்கையும், மந்த்ரார்த்த முகத்
தாலே அஜ்ஞாநத்தை நிரஸித்து, ஜ்ஞாநத்தை
யுண்டாக்கி, ததநுரூபமான வ்ருத்தியிலே நிய
மித்து, ததீயாத்தர்ப்பாவத்தை யுண்டாக்குகை
யும், கைங்கர்யங் கொள்ளுகையும். இனி பாக
வதர் செய்த வுபகாரமாவது - குணலேஸ மின்
றிக்கே தோஷங்களிலுலே பூர்ணனான தன்னை,
ஆசார்ய ஸம்பந்தத்தையே பார்த்து ஸ்வ
ரூபானுரூபமான போகத்திலே கூட்டிக்
கொண்டு கைங்கர்யத்துக்கு விஷயமாக்குகை.
இனி லீலோபகரணமான அசேதநமும் - ப்ர
க்ருதி யென்றும் காலமென்றும் த்விவிதம். ப்ரக்ரு
தியாகிறது - ஸத்வராஜஸ்தமோ குணத்மகமாய்,
நித்யமாய், தன்னுடே ஸம்பந்தித்த சேதந
ருக்கு தத்தத் கர்மாநுகுணமான தேஹேந்த்ரி
யாதி ரூபமாய், அநேக விகாரங்களை யுடைத்தான
தாய், ஸப்தாதி விஷயப்ராவண்யத்தையும், பகவத்
விஷய வைமுக்யத்தையும் பிறப்பிக்குமதா யிருக்
கும் அசித்விசேஷம். காலமாகிறது-நித்யமாய்,
நிமேஷகாஷ்டாதி ரூபமான பஹுவிகாரங்களை
யுடைத்தாய், சேதநருடைய கர்மத்துக்கும் ததநு
குணரூபமான போகத்துக்கும் ஹேதுவாயிருக்

கும். இனி லீலாபரிகரமும் போக பரிகரமுமான சேதநாசேதநவர்க்கம், ஸ்வவிலக்ஷணமான ப்ரஹ்மத்துக்கு வ்யாப்யமாய், தார்யமாய், நியாம்யமாய், ஸரீரமாய், லக்ஷணமாயிருக்கும். இனி விலக்ஷணமும்-அகிலஹேய ப்ரத்யநீகமாய், கல்யாணைகதாநமாய், ஸ்தைக ரஸமாய், விபுவாய், நித்யமாய், ஜ்ஞாநாநந்தங்களே ஸ்வரூபமாகவுடையதுமாய், ஜ்ஞாநசக்திபாத்யநந்த குணகணபூஷிதமாய், ஸ்வவிசேஷணமான ஸகல சேதநாசேதநங்களுக்கும் வ்யாபகமாய், தாரகமாய், நியாமகமாய், ஸ்ரீரியாய், லக்ஷியாய், விலக்ஷண விக்ரஹயுக்தமாய், லக்ஷ்மீ பூமி நீளாஸமேதமாய், நித்யமுக்தாநுபாவ்யமாய், சகல ஜகத் ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரகர்த்தாவாய், ஸர்வலோக ஸரண்யமாய், ஸகல பலப்ரதமாய், ப்ரஹ்மருத்ராதி தேவதைகளுக்கும், ஸனகஸனந்தநாதி யோகிகளுக்கும் அவாங்மாநஸ கோசரமாய், ஸ்ருத்யைக ஸமதிகம்யமாய், ஸமாஸ்ரிதைக ஸுலபமாய், ததுஜ்ஜீவநைக பரயோஜநமாய், பரவ்யூஹ விபவாந்தர்யாம்யர்ச்சாவதார ரூபங்களே யுடைத்தாயிருக்கும். இப்படிப்பட்ட ஸமஸ்த விலக்ஷண விசிஷ்டமான ப்ரஹ்ம மொன்றையு மறிந்த வதிகாரி வேறொன்றையு மறியவேண்டாத க்ருதக்ருத்யன். இந்த வதிகாரியே ஜ்ஞாநாதிகரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் நித்யமுக்தர்களுக்கும், ஆசார்யனுக்கும், பிராட்டிக்கும், ஸ்ரீயःபதிக்கு மத்யந்த ப்ரியதமன்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஸரணம்.

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

நிகமநப்படி

திருமந்த்ரப்ரகரணம்

ஸ்லோகம்

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோயாமுநஸூநவே
யத்கடாக்ஷகலக்ஷ்யாணாம் ஸுலபஸ் ஸ்ரீதரஸ்ஸதா.

திருமந்த்ரம் எட்டு திருவக்ஷரமாய், மூன்று பதமாயிருக்கும். எங்ஙனே யென்னில் ஓம் என்றும், நமः என்றும், நாராயணாய என்றும் மூன்றுபதமாயிருக்கும். அதில் முதல் பதம் ஏகாக்ஷரமான ப்ரணவம். இது அகாரமென்றும், உகாரமென்றும், மகாரமென்றும் மூன்று திருவக்ஷரமாய் மூன்றுபதமாயிருக்கும். இரண்டாம் பதமான நமஸ்ஸு, ந-என்றும், மः-என்றும் இரண்டு திருவக்ஷரமாய் இரண்டு பதமாயிருக்கும். மூன்றும்பதமான நாராயணாய பதம் அஞ்சு திருவக்ஷரமாய், நார-என்றும், அயந- என்றும், இரண்டுபதமாய், மேல் ஆயவென்று சதுர்த்தியாயிருக்கும். எம்பெருமானுடைய ஸர்வரக்ஷகத்வமும் ஸமஸ்தகல்யாண குணாத்மகத்வமும் ஸர்வலக்ஷித்வமும், ஸ்ரீயःபதித்வமும் இவை அகாரார்த்தம். அந்யலக்ஷத்வ நிவ்ருத்தியும், பகவதநந்யார்ஹ லக்ஷத்வமும் இவை உகாரார்த்தம். ஆத்மாவினுடைய ஜ்ஞாநாநந்தத்வமும், ஜ்ஞாநகுணகத்வமும், நித்யத்வமும்,

அணுத்வமும், ஏக ரூபத்வமும், ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாசத்வமும், ப்ரக்ருதேः, பரத்வமும் இவை மகாரார்த்தம். ஸ்வாஹங்கார மமகார நிவ்ருத்தியும், நிவ்ருத்தமான ஸ்வரூபத்தினுடைய வத்யந்த பாரதந்தர்யமும், பாரதந்தர்ய பராகாஷ்டையான ததீய ஸேஷத்வமும், பரதந்த்ரனுக் கநுரூபமான புபாயத்வமும் இவை நமஸ்ஸுப்தார்த்தம். சேதநாசேதநங்களினுடைய நித்யத்வமும், அவற்றினுடைய ஸமூஹத்வமும், ஸமூஹ ஸங்க்யாதத்வமும் இவை நாராயணப்தார்த்தம். ஈஸ்வரனுடைய தாரகத்வமும், வ்யாபகத்வமும், நியந்த்ருத்வமும், ஸர்வவித பந்துத்வமும், ப்ராப்யத்வமும், ப்ராபகத்வமும், ஸகல ஜகத்காரணத்வமும் இவை அயநப்தார்த்தம். நித்ய கைங்கர்ய ப்ரார்த்தனை ஆயஸுப்தார்த்தம். எம்பெருமானை யொழிய ரக்ஷகாந்தரப்ரதிபத்தி நடையாடிற்றுகில் அகாரார்த்தம் நெஞ்சில் பட்டதில்லையாகக் கடவது. அந்ய ஸேஷத்வம் நடையாடிற்றுகில் உகாரார்த்தம் நெஞ்சில் பட்டதில்லையாகக் கடவது. அநாத்மாவான தேஹத்தில் ஆத்மபுத்தி நடையாடிற்றுகில் மகாரார்த்தம் நெஞ்சில் பட்டதில்லையாகக் கடவது. ஸ்வஸ்வாதந்த்ர்யமும், ஸ்வரக்ஷண ப்ரதிபத்தியும், ஸ்ரீவைஷ்ணவ ஸமபுத்தியும், உபாயாந்தரமும் நடையாடிற்றுகில் நமஸ்ஸுப்தார்த்தம் நெஞ்சில்பட்டதில்லையாகக் கடவது. ஈஸ்வர ஸரீரபூதரான சேதநா சேதநங்களோடே ராகத்வேஷம் நடையாடிற்றுகில் நாராயணப்தார்த்தம்

நெஞ்சில் பட்டதில்லையாகக் கடவது. அபத்துக்கள் பக்கலிலே பந்துத்வ ப்ரதிபத்தி நடையாடிற்றுகில் அயநஸுப்தார்த்தம் நெஞ்சில் பட்டதில்லையாகக் கடவது. அபோக்யமான சப்தாதி விஷயங்களிலே போக்யதாபுத்தி நடையாடிற்றுகில் ஆய ஸுப்தார்த்தம் நெஞ்சில் பட்டதில்லையாகக்கடவது. திருமந்த்ரத்துக்கு தாத்பர்யார்த்தமேது? வாக்யார்த்தமேது? ப்ரதாநார்த்தமேது? அநுஸந்தாநார்த்தமேதென்னில், தாத்பர்யார்த்தம்-ஸகலவேத சாஸ்த்ர ருசி பரிக்ரஹீதம். வாக்யார்த்தம்-ப்ராப்ய ஸ்வரூபநிரூபணம். ப்ரதாநார்த்தம்-ஆத்மஸ்வரூப நிரூபணம். அநுஸந்தாநார்த்தம்-ஸம்பந்தாநுஸந்தாநம். ஸம்பந்த மேதென்னில்-அகார பதத்தாலே பிதாபுத்ர ஸம்பந்தஞ்சொல்லி, அவ-ரக்ஷணே என்கிற தாதுவினுலே ரக்ஷ்ய ரக்ஷக ஸம்பந்தஞ்சொல்லி, ஷஷ்டி சதுர்த்தியாலே ஸேஷி ஸேஷ ஸம்பந்தஞ் சொல்லி, உகாரபதத்தாலே பர்த்ருபார்யா ஸம்பந்தஞ்சொல்லி, மகாரபதத்தாலே ஜ்ஞாத்ரு-ஜ்ஞேயஸம்பந்தஞ் சொல்லி, நமः பதத்தாலே ஸ்வஸ்வாமி ஸம்பந்தஞ் சொல்லி, நாரபதத்தாலே சரீர சரீரி ஸம்பந்தஞ் சொல்லி, அயந பதத்தாலே ஆதாராதேய ஸம்பந்தஞ் சொல்லி, ஆயபதத்தாலே போக்த்ருத்வ போக்யத்வ ஸம்பந்தஞ் சொல்லி, ஆக திரு மந்த்ரத்தால் நவவித ஸம்பந்தஞ் சொல்லித் தலைக்கட்டுகிறது.

த்வயப்ரகரணம்

த்வயம் இரண்டுவாக்யமாய், ஆறுபதமாய், பத்தர்த்தமாய், இருபத்தஞ்சு திருவக்ஷரமாயிருக்கும். அதில் பூர்வவாக்யம் பதினஞ்சு திருவக்ஷரமாய், உத்தரவாக்யம் பத்துத் திருவக்ஷரமாய் இருக்கும். எங்ஙனே யென்னில் "ஸ்ரீமந் நாராயண சரணௌ ஸரணம் ப்ரபத்யே" என்றும், "ஸ்ரீமதே நாராயணாயநமஃ" என்றும் இரண்டு வாக்யமாயிருக்கும். ஸ்ரீமந்நாராயண சரணௌ என்றும், ஸரணம் என்றும், ப்ரபத்யே என்றும், ஸ்ரீமதே என்றும், நாராயணாயவென்றும், நமஃ என்றும் ஆறுபதமாய், ஸ்ரீ என்றும், மத் என்றும், நாராயண என்றும், சரணௌ என்றும், ஸரணம் என்றும், ப்ரபத்யே என்றும், ஸ்ரீமதே என்றும், நாராயண வென்றும் ஆயவென்றும், நமஃ என்றும், பத்து அர்த்தமாயிருக்கும். ஸ்ரீ என்கையாலே எம்பெருமானுக்கே மறக்கவொண்ணாத பெரிய பிராட்டியாருடைய புருஷகாரத்வஞ்சொல்லி, மன் என்கையாலே அப்புருஷகாரத்தினுடைய நித்யயோகஞ்சொல்லி, நாராயண என்கையாலே இப்படி புருஷகார பூதையான பெரிய பிராட்டியார் தான் குறைசொல்லிலும், "என்னடியார தது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" என்னும்படியான வாத்ஸல்யாதி குணயோகஞ் சொல்லி, சரணௌ என்கையாலே அக்குணங்களுக்கும் பெரிய பிராட்டியாருக்கும் ஆஸ்ரயணீயமான விலக்ஷண விக்ரஹ யோகஞ்சொல்லி,

ஸரணம் என்கையாலே அவ்விக்ரஹமே உபாயமென்னுமிடஞ் சொல்லி, ப்ரபத்யே என்கையாலே உபாயவ்ஸ்வீகாரம் பண்ணின அதிகாரியினுடைய அத்யவஸாயஞ் சொல்லி, ஸ்ரீமதே என்கையாலே மிதுனமே ப்ராப்யமென்னுமிடஞ்சொல்லி, நாராயண என்கையாலே எம்பெருமானுடைய ஸர்வஸ்வாமித்வஞ்சொல்லி, ஆய என்கையாலே அவன் திருவடிகளிலே பண்ணும் வ்ருத்தி விசேஷஞ் சொல்லி, நமஃ என்கையாலே அவ்ருத்திக்கு விரோதியான ஸ்வாஹங்காரமமகார நிவ்ருத்தியைச்சொல்லித் தலைக்கட்டுகிறது. த்வயத்துக்கு தாத்பர்யார்த்தமேது? வாக்யார்த்தமேது? ப்ரதானார்த்தமேது? அநுஸந்தானார்த்த மேதென்னில்; தாத்பர்யார்த்தம் ஆசார்யருசி பரிக்ரஹீதம். வாக்யார்த்தம்-ப்ராபகஸ்வரூப நிரூபணம். ப்ரதானார்த்தம்-மிதுநகைங்கர்யம். அநுஸந்தானார்த்தம்-ஸ்வதோஷாநுஸந்தானஞ் சொல்லித் தலைக்கட்டுகிறது.

சமரச்லோக ப்ரகரணம்

சரமச்லோகம் இரண்டு அர்த்தமாய், பதிநெரு பதமாய் மூப்பத்திரண்டு திருவக்ஷரமாயிருக்கும். எங்ஙனே யென்னில் "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஸரணம்வ்ரஜ, அஹந்த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுசஃ" என்று இரண்டர்த்தமாயிருக்கும். ஸர்வதர்மாந் என்றும், பரித்யஜ்ய என்றும், மாம் என்றும், ஏகம் என்றும், ஸரணம் என்றும், வ்ரஜ என்றும்,

அஹம் என்றும், த்வா என்றும், ஸர்வபாபேப்யஃ என்றும், மோக்ஷயிஷ்யாமி என்றும், மாசுசஃ என்றும்,, பதினொரு பதமாயிருக்கும். "ஸர்வதர்மாந்" என்கையாலே இதரோபாயங்களைச் சொல்லி, "பரித்யஜ்ய" என்கையாலே இதரோபாய நிவ்ருத்தியைச் சொல்லி, "மாம்" என்கையாலே ஸம்பக்ஞ்ஞாந உபாயஞ்சொல்லி, "ஏகம்" என்கையாலே உபாயாந்தரபேக்ஷயஞ் சொல்லி; "ஸரணம்" என்கையாலே உபாயத்வஞ் சொல்லி, "வ்ரஜ" என்கையாலே உபாயஸ்வீகாரஞ் சொல்லி, "அஹம்" என்கையாலே தன்னுடைய ஸர்வஸக்தித்வம் சொல்லி, "த்வா" என்கையாலே உபாயஸ்வீகாரம் பண்ணின வதிகாரிஸ்வரூபஞ் சொல்லி, "ஸர்வபாபேப்யஃ" என்கையாலே ப்ராப்ய ப்ரதிபந்தகங்களைச் சொல்லி, "மோக்ஷயிஷ்யாமி" என்கையாலே ப்ராப்யப்ரதிபந்தக நிவ்ருத்தியைச் சொல்லி, "மாசுசஃ" என்கையாலே நிர்பரத்வாநு ஸந்தாநஞ் சொல்லித் தலைக்கட்டுகிறது. சரமஸ்லோகத்துக்குத் தாத்பர்யார்த்தமேது? வாக்யார்த்தமேது? ப்ரதாநார்த்தமேது? அநுஸந்தாநார்த்தமேதென்னில்; தாத்பர்யார்த்தம்-ஸரண்ய ருசிபரிக்ரஹீதம், வாக்யார்த்தம் - ப்ராபகஸ்வரூபநிரூபணம், ப்ரதாநார்த்தம்-ஈச்வர ஸ்வரூபநிரூபணம், அநுஸந்தாநார்த்தம் - நிர்பரத்வாநுஸந்தாநஞ் சொல்லித் தலைக்கட்டுகிறது.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஸரணம்.

அம்மங்கி அஞ்சுவார்த்தை

அம்மங்கியம்மாள் உடையவருக்குத் தீர்க்க ப்ரணமமாக தண்டம் ஸமர்ப்பித்து, "அடியேன் திருக்கண்ணபுரம் வேவித்து விடைகொள்ளுகிறே" னென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் அஞ்சுவார்த்தை யருளிச்செய்தார். அதென்னென்னில், "அக்நிஜ்வாலையை யணுகாதே-அசுசியை மிதியாதே-அறநஞ்சு தின்னுதே-அபலர்களைக் கூடாதே-ஆர்த்தரோடேகூடி அணுகி வர்த்தித்து வாரு" மென்று அருளிச் செய்தார். அக்நிஜ்வாலையாவது - சைவ மாயாவாதிகள். அவர்களைக் கண்டால் அக்நியையும் ஸர்ப்பத்தையுங் கண்டாற்போலே கண்டு விலகி வாருமென் றருளிச் செய்தார். அசுசியாவது-ஸரீரதத்பரரான ஸம்ஸாரிகள். அவர்களைக்கண்டால் காஷ்ட லோஷ்டாதிகளைக் கண்டாற் போலே கண்டு விலகி வாருமென் றருளிச்செய்தார். அறநஞ்சாவது - ரூபநாமங்களை யுடையராய், அந்யோந்ய பரராய, ப்ரயோஜநாந்தரபரராய் மயக்கப்பட்டவர்கள். அவர்களைக்கண்டால் கற்பூரத்தையும், எலுமிச்சம்பழத்தையுங் கண்டாற்போலே கண்டு விலகிவாருமென் றருளிச் செய்தார். அபலர்களாவது - அருளிச்செயலில் வாஸனைபண்ணி ஸ்வரூபஸிக்ஷ யில்லாதவர்கள். அவர்களைக்கண்டால் காமரஸ மறியாத கன்னிகைகளைக் கண்டாற்போலேகண்டு நிவர்த்தித்து வாருமென் றருளிச்செய்தார். ஆர்த்தராகிறார். பூர்ணதிகாரிகள். அவர்களைக் கண்டால்

தென்றல் நிலாவை கண்டாப்போலேயும், சந்தன குவளை தாம்பூலாதிகளைக் கண்டாற்போலேயும், பசியன் சோற்றைக் கண்டாற்போலேயுங் கண்டு, சேர்த்து அணுகி வர்த்தித்து வாருமென்றருளிச் செய்தார்.

திருக்கோளூர் பெண்பிள்ளை ரஹஸ்யம்

திருக்கோளூருக்கு எம்பெருமானை யெழுந் தருளினபோது, திருக்கோளூரில் நின்றும் ஒரு பெண்பிள்ளை எதிரேவந்து தண்டனிட்டு நிற்க, "பெண்ணே! நீ யெங்கு நின்றும் புறப்பட்டா" யென்று கேட்டருள, பெண்ணும் "திருக்கோளூரில் நின்றும் விடைகொண்டே" னென்று விண்ணப்பஞ்செய்ய, அத்தைச் திருச்செவி சாத்தியருளி எம்பெருமானர் "ஒருவர்கூரை யெழுவ ருடித்துக் காய் கிழங்கு சாப்பிட்டு "திண்ணமென்னிளமான் புகுமூர் திருக்கோளூரே" என்கிறபடியே "எல்லாருக்கும் புகுமூர் உனக்குப் புறப்படு மூராயிற்று?" என்றருளிச் செய்தார். அதைக்கேட்டு அந்தப் பெண்பிள்ளை விண்ணப்பஞ் செய்தபடி "அடியேன் நாயிற்றேன் நாயிற்றேன்!

1 அழைத்துவருகிறேனென்றேனை அக்ரூரைப்போலே.
2 அகமொழித்துவிட்டேனை விதுரரைப்போலே.
3 தேரறத்தவிட்டேனை ருக்மிபத்னியைப்போலே.
4 தமுகனைச்செற்றேனை பிராட்டியைப்போலே.
5 பிணமெழுப்பிவிட்டேனை தொண்டைமானைப்போலே.
6 பிணவிருந்திட்டேனை கண்டாகர்ணனைப்போலே.

7 தாய்க்கோலஞ்செய்தேனை அநலையைப்போலே.
8 தந்தையெங்கேயென்றேனை த்ருவனைப்போலே.
9 மூன்றெழுத்துச்சொன்னேனை கூத்ரபந்துவைப்போலே.
10 முதலடியைப்பெற்றேனை அஹல்யையைபோலே.
11 பிஞ்சாய்ப்பழுத்தேனை ஆண்டாளைப்போலே.
12 எம்பெருமானென்றேனை பட்டர்பிரான்போலே.
13 ஆராய்ந்துவிட்டேனை திருமழிசையார்போலே.
14 நான்சிறியனென்றேனை ஆழ்வாரைப்போலே.
15 ஏதேனுமென்றேனை குலசேகரர்போலே.
16 யான்லக்ஷ்மியமென்றேனை க்ருஷ்ணனைப்போலே.
17 அடையாளஞ்சொன்னேனை கபந்தனைப்போலே.
18 அந்தரங்கஞ்சொன்னேனை த்ரிஜடையைப்போலே.
19 அவன்தலைமகனென்றேனை மண்டோதரியைப்போலே.
20 அஹம்வேத்மியென்றேனை விச்வாமித்ரனைப்போலே.
21 தேவுமற்றறியேனென்றேனை மதுரகவியார்போலே.
22 தைவத்தைப்பெற்றேனை தேவகியார்போலே.
23 ஆழிமறையென்றேனை வஸுதேவரைப்போலே.
24 ஆயனேவளர்த்தேனை யசோதையார்போலே.
25 அநுயாத்ரஞ்செய்தேனை அனிலங்களைப்போலே.
26 அவல்பொரியையீந்தேனை குசேலரைப்போலே.
27 ஆயுதங்களீந்தேனை அகஸ்தியரைப்போலே.
28 அந்தரங்கம்புக்கேனை ஸஞ்சயனைப்போலே.
29 காமத்தாற்பெற்றேனை ஜனகரைப்போலே.
30 கடித்தவனைக்கண்டேனை திருமங்கையார்போலே.
31 குடைமுதலான தானேனை வனந்தாழ்வான்போலே.
32 கொண்டுதிரிந்தேனை திருவடியைப்போலே.
33 இளைப்புவிடாய்தீர்த்தேனை நம்பாடுவான்போலே.
34 இடைகழியேகண்டேனை முதலாழ்வார்கள்போலே.
35 இருமன்னர்பெற்றேனை வால்மீகிபோலே.
36 இருமாலையீந்தேனை தொண்டரடிப்பொடியார்போலே.
37 அவனுரைக்கப்பெற்றேனை திருக்கச்சியார்போலே.
38 அவன்மேனியானேனை திருப்பாணர்போலே.

39 அனுப்புவியுமென்றேனே வஸிஷ்டரைப்போலே.
40 அடிவாங்கினேனே கொங்கிற்பிராட்டியைப்போலே.
41 மண்பூவையிட்டேனே குருவகம்பியைப்போலே.
42 மூலமென்றழைத்தேனே கஜராஜனைப்போலே.
43 பூசக்கொடுத்தேனே கூனியைப்போலே.
44 பூவைக்கொடுத்தேனே மாலாகாரரைப்போலே.
45 வைத்திடத்திருந்தேனே பரதனைப்போலே.
46 வழியடிமைசெய்தேனே லக்ஷ்மணனைப்போலே.
47 அக்கரைக்கேவிட்டேனே குஹப்பெருமாளைப்போலே.
48 அரக்கருடன்பொருதேனே பெரியவுடையார்போலே.
49 இக்கரைக்கேசென்றேனே விபீஷணரைப்போலே.
50 இனியதென்றுவைத்தேனே சபரியைப்போலே.
51 இங்குமுண்டென்றேனே ப்ரஹ்லாதனைப்போலே.
52 இங்கில்லையென்றேனே கதிபாண்டனைப்போலே.
53 காட்டுக்குப்போனேனே பெருமாளைப்போலே.
54 கண்டுவந்தேனென்றேனே திருவடியைப்போலே.
55 இருகையும்விட்டேனே க்ரௌபதியைப்போலே.
56 இங்குபால்பொங்குமென்றேனே வடுகநம்பியைப்போலே.
57 இறுமிடருபிடித்தேனே செல்வப்பிள்ளையைப்போலே.
58 நில்லென்றுபெற்றேனே இடையாற்றார்நம்பியைப்போலே.
59 நெடுந்தூரம்போனேனே நாதமுனியைப்போலே.
60 அவன்போனனென்றேனே மாருதியாண்டான்போலே.
61 அவன்வேண்டாமென்றேனே ஆழ்வானைப்போலே.
62 அத்வைதம்வென்றேனே எம்பெருமானாரைப்போலே.
63 அருளாழிகண்டேனே கல்வனைப்போலே.
64 அனந்தபுரம்புக்கேனே ஆளவந்தாரைப்போலே.
65 ஆரியனைப்பரிந்தேனே தெய்வவாரியாண்டான்போலே.
66 அந்தாதிசொன்னேனே அமுதனாரைப்போலே.
67 அநுகூலஞ்சொன்னேனே மாலியவானைப்போலே.
68 கள்ளனிவனென்றேனே லோககுருவைப்போலே.
69 கடலோசையென்றேனே பெரியநம்பியைப்போலே.
70 சுற்றிக்கிடந்தேனே மாலியாண்டான்போலே.

71 சூழறவுகொண்டேனே கோட்டியூரார்போலே.
72 உபிராய்ப்பெற்றேனே வுமையைப்போலே.
73 உடம்பைவெறுத்தேனே நறையூராரைப்போலே.
74 என்னைப்போலென்றேனே வுபரிசரனைப்போலே.
75 யான்சிறியேனென்றேனே மலைநம்பியைப்போலே.
76 நீரில்குதித்தேனே கணபுரத்தானைப்போலே.
77 நீரோருகங்கொண்டேனே காசிசிங்கனைப்போலே.
78 வாக்கினல்லென்றேனே பட்டரைப்போலே.
79 வாயிற்கையிட்டேனே எம்பாரைப்போலே.
80 தோள்காட்டிவந்தேனே பட்டரைப்போலே.
81 துறைவேறுசெய்தேனே பகவரைப்போலே.

என்கிறபடியே "மைநின்றவரைபோலும் திருவுருவ வாட்டாற்முற் கெந் நன்றிசெய் தேனை வென்னஞ்சிற் றிகழ்வதுவே" என்கிற படியே இப்படிப்பட்ட ஜ்ஞானங்களுடையார் ஜ்ஞானத்திலே யொருத்தருடைய ஜ்ஞான மடியேனுக்குண்டானல் திருக்கோளூரில் விடை கொண்டிருக்கலாம். அந்த ஜ்ஞானமடியேனுக் கில்லை. மூலல் புழுக்கை வயலிலே கிடந்தென்? வரப்பிலே கிடந்தென்? என்று விண்ணப்பஞ் செய்து, தேவரீர் எழுந்தருளி மங்களாஸாஸனஞ் செய்தருளினால், வைத்தமாநிதிக்கும் மதுரகவி களுக்கும் நித்தியோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவாதிகளுண் டாகுமென்று விண்ணப்பஞ்செய்ய, அத்தைத் திருச்செவி சாத்தியருளி, போரவுகந்தருளி, அந்தப் பெண்பிள்ளை திருமாளிகையி லெழுந் தருளி, தளிகை பண்ணச்சொல்லி, தாம் அமுது செய்தருளி, தளிகை ப்ரஸாதமும் ஸ்ரீபாத

தீர்த்தமும் ஸாதித்தருளினரென்று திருவாய் மொழிப்பிள்ளை யருளிச்செய்தாரென்று பெரிய வாசமாமலை ஜீயர் அருளிச்செய்தருளினர்.

ஜீயர் திருவடிகளே ஸரணம்.

எம்பார் பட்டருக்கு அருளிச்செய்த பத்துவார்த்தை

1. ஸ்ரீவைஷ்ணவன் ஸரீராவஸானத்திலே எம்பெருமான் திருவடிகளிலே சேரலாம் என்றிருக்கை. 2. அப்போதும் அவனாலே பெறவேணுமென்றிருக்கை. 3. தேவதாந்தர பஜனை பண்ணுதொழிகை. 4. தேவதாந்தர பஜனம் பண்ணுவாரோட்டைச் சேர்த்தி வருந்தியுந் தவிருகை. 5. ஆழ்வார்களுகந்தருளின திவ்ய தேஸங்களிலே ப்ரவணனாய் வர்த்திக்கை. 6. அநுகூல ஸம்பன்னனாயிருக்கை. 7. பகவத் பாகவ தாசார்யாபசாரங்களை வருந்தியுந் தவிருகை. 8. ஆழ்வார்களருளிச்செயலில் அர்த்தாநுபவம் பண்ணுகை. 9. ஆழ்வார்க ளீரச்சொல்லிலே நெஞ்சு நிற்கும் ஸாதுக்களோடே ஸஹவாசம் பண்ணுகை. 10. ஆசார்ய கைங்கர்யம் பண்ணுகை. பண்ணுநாள் இழவுபட்டிருக்கையும் பண்ணும் நாளுகந்திருக்கையும்.

எம்பார் திருவடிகளே ஸரணம்.

மூதலியாண்டான் பத்துவார்த்தை

1. ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸம்ஸாரத்திலிருக்கு மிருப்பு - பிராட்டி ராவண பவநத்திலிருந்து காட்டியருளினார். எங்ஙனேயென்னில், பிராட்டி இளையபெருமாள் விஷயமாகப்பேசின வார்த்தையாலே பெருமாளைப் பிரிந்து போனற் போலே, இந்தச் சேதனனுக்குத் தீயவிஷயத்தில் பண்ணு மபசாரம் ஈஸ்வரன் திருவடிகளில் நினைவை லபியாமற் பண்ணும். 2. பிராட்டிக்கு அஸோக வனம்போலே, இவனுக்கு ப்ரக்ருதி ஸம்பந்தமான தேஹம். 3. பிராட்டிக்குக் கந்த மூல பலங்கள் ஸமர்ப்பிக்கிற ராக்ஷஸ ஸ்த்ரீகளுடைய ஸஹவாஸம்போலே, இவனுக்குப் புத்ர மித்ராதி ஸஹவாஸம். 4. பிராட்டிக்கு மாரீச தர்ஸனம்போலே, இவனுக்கு விஷயப்ராவண்யம். 5. பிராட்டி திருவடியைக் கண்டதைப் போலே, இவனுக்கு ஸ்ரீராமாயண பாரத பாகவத புராணரத்நாதிகளையும், ஆழ்வாராசார்யர்களுடைய திவ்யப்ரபந்த ரஹஸ்யங்களையுங் கேட்கை. 7. பிராட்டிக்கு ஸ்ரீ மூத்தை கொடுத்து வரவு சொன்னற்போலே, இவனுக்கு ஆசார்ய னருளிச்செய்த குருபரம்பரை. 8. பிராட்டி திருவடிக்கு ஸிரோரத்நங் கொடுத்தாற்போலே, இவனுக்கு ஆசார்யன் சொன்ன திருமந்த்ரம். 9. பிராட்டிக்கு ஸ்ரீ விபீஷணாழ்வானுடைய திருமகளார் பேச்சுத்துணையாலற்போலே, இவனுக்கு பாகவத ஸஹவாசமும் அவர்கள் திவ்ய ஸூக்தியும். 10. பிராட்டிக்கு விரோதிகளான

